

ஒரே சிந்தனை!



ஒரே திட்டம்!



ஒரே செயல்!

# வானுயர் வள்ளுவர் சிலை



இந்தியாவின் தென்முனை-தமிழ்நாட்டின் தெற்கு எல்லை, முக்கடல் சங்கமிக்கும் கன்னியாகுமரியில் வான் புகழ் வள்ளுவருக்கு 133 அடி உயரத்தில் சிலை அமைத்து, அதனை புத்தாயிரம் ஆண்டின் தொடக்க நாளான 1-1-2000 அன்று திறந்து வைத்தார் முத்தமிழறிஞர் கலைஞர்.

தமிழ் நிலத்தின் எல்லையில் தமிழின் உலக அடையாளமாகத் திகழும் திருக்குறளை இயற்றிய அய்யன் திருவள்ளுவர் சிலை ஆழிப்பேரலையையும் எதிர்கொண்டு உறுதியுடன் நிற்கிறது.

குமரி முனைக்கு வரும் உள்நாட்டு-வெளிநாட்டுப் பயணிகள் கண்கள் விரிய இந்த சிலையைக் கண்டு மகிழ்கின்றனர்.

## கண்ணாடிப் பாலம்



அய்யன் திருவள்ளுவர் சிலை நிறுவப்பட்டதன் வெள்ளிவிழாவைக் கொண்டாடும் வகையில் 30-12-2024 அன்று சிலை புதுப்பொலிவு பெற்றதுடன், திருவள்ளுவர் சிலைக்கும் விவேகானந்தர் பாறைக்கும் இடையே கடலுக்கு மேல் கண்ணாடிப் பாலம் அமைத்து திறந்து வைத்தார் திராவிட மாடல் அரசின் நாயகர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள்.

## டைடல் பார்க்

தொலைநோக்குப் பார்வை கொண்ட முத்தமிழறிஞர் கலைஞர், காலத்திற்கேற்ற வளர்ச்சிக்கேற்ப தமிழ்நாட்டைக் கட்டமைத்தவர். இந்தியாவிலேயே முதன் முறையாக ஒரு மாநிலத்திற்கான தகவல்தொழில்நுட்பக் கொள்கையை வகுத்து, தமிழ்நெட்99 என்ற இணைய மாநாட்டையும் நடத்திய கலைஞர், கணினி மென்பொருள் சார்ந்த பன்னாட்டு நிறுவனங்களில் தமிழ்நாட்டு இளந்தலைமுறையினர் நல்ல ஊதியத்துடன் பணியாற்றுவதற்கு வசதியாக சென்னையில் டைடல் பூங்காவை உருவாக்கினார். 2000ஆம் ஆண்டு அப்போதைய பிரதமர் வாஜ்பாய் அவர்கள் இதனைத் திறந்து வைத்தார். தகவல் தொழில்நுட்பத் துறையில் தமிழ்நாடு பெரும் பாய்ச்சல் நடத்துவதற்கு இந்த டைடல் பார்க் தொடக்கப்புள்ளியாக அமைந்தது. சென்னையைத் தொடர்ந்து திருச்சி, மதுரை, கோவை போன்ற நகரங்களிலும் டைடல் பார்க்குகள் உருவாகி, பன்னாட்டு நிறுவனங்கள் தங்கள் அலுவலகங்களை அமைத்து, தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கின.




## 'நியோ' பார்க்

சென்னை போன்ற பெரிய நகரங்களில் மட்டுமின்றி, இரண்டாவது நிலையில் உள்ள நகரங்களிலும், கணினி சார்ந்த கல்வியில் பட்டம் பெற்றவர்கள் தங்கள் ஊரிலேயே வேலை பார்க்கின்ற வகையில் தஞ்சை, சேலம், நாகை உள்ளிட்ட பல இடங்களில் திராவிட மாடல் ஆட்சியில் டைடல் நியோ பூங்காக்கள் அமைக்கப்பட்டன.



# மருத்துவ கட்டமைப்பில் முத்தமிழறிஞர் கலைஞர்



தமிழ்நாட்டின் மருத்துவ கட்டமைப்பை மிக சிறப்பாக உருவாக்கி அனைவருக்கும் அனைத்து சிகிச்சைகளும் கிடைக்கக்கூடிய வசதியை உருவாக்கியவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர். மாவட்டங்கள் தோறும் அரசு மருத்துவக் கல்லூரி, அந்தக் கல்லூரிக்கான மருத்துவமனை, மாவட்ட தலைமை மருத்துவமனைகள், ஒவ்வொரு நகரத்திலும் அரசு மருத்துவமனைகள் ஆகியவற்றுடன் கிராமப்புற மக்களும் தங்களுக்கு தேவையான அவசர சிகிச்சை மகப்பேறு உதவிகளை பெறுவதற்கு வசதியாக ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள் என தமிழ்நாட்டின் தலைநகரம் முதல் கடைக்கோடி கிராமம் வரை மருத்துவ கட்டமைப்பை வலுப்படுத்தினார், உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் மருத்துவக் காப்பீட்டு திட்டம், 108 ஆம்புலன்ஸ் திட்டம், இதயம், செவித்திறன் உள்ளிட்ட அதிக செலவு கொண்ட சிகிச்சைகளுக்கு அரசு உதவி என தமிழ்நாட்டை இந்தியாவின் மருத்துவ தலைநகராக மாற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர்.






# அண்ணா நூற்றாண்டு நூலகம்




அறிவாற்றல் மிக்க தமிழ்ச் சமுதாயம் அனைத்து நிலைகளிலும் சிறப்பாகத் திகழ்ந்திட உலகத் தரத்திலான அண்ணா நூற்றாண்டு நூலகத்தை 2010ஆம் ஆண்டு சென்னையில் அமைத்தார் முத்தமிழறிஞர் கலைஞர். 3 இலட்சத்து 75 ஆயிரம் சதுர அடி பரப்பளவில் 7 அடுக்குகளைக் கொண்ட இந்த நூலகம் ஆசியாவிலேயே இரண்டாவது மிகப் பெரிய நூலகமாகும். குழந்தைகளுக்கானப் புத்தகங்கள், பார்வையற்ற மாற்றுத்திறனாளிகள் படிப்பதற்கான ப்ரெய்லி எழுத்துப் புத்தகங்கள், குடிமைப்பணித் தேர்வுக்குத் தயாராகும் மாணவர்களுக்குத் தேவையான புத்தகங்கள், ஆராய்ச்சிப் படிப்பில் ஈடுபடுபவர்களுக்கான நூல்கள், குழந்தைகளுக்கான புத்தகப் பகுதி, அறிவு சார்ந்த விழாக்கள் நடத்துவதற்கான அரங்குகள் ஆகியவை அமையப்பெற்ற அண்ணா நூற்றாண்டு நூலகம், அறிவுத் திருத்தலமாகத் திகழ்கிறது.

# கலைஞர் நூற்றாண்டு நினைவு நூலகம்




பேரறிஞர் அண்ணா நூற்றாண்டில் அவர் பெயரில் மாபெரும் நூலகம் அமைந்தது போல, முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டையொட்டி, திராவிட மாடல் ஆட்சியில் மதுரையில் 8 தளங்களைக் கொண்ட கலைஞர் நூற்றாண்டு நினைவு நூலகம் கட்டும் பணிகள் தொடங்கப்பட்டு, 2023ஆம் ஆண்டில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. தென் தமிழ்நாட்டின் அறிவுச்சோலையாக இது திகழ்கிறது.


# தமிழர் திறம் பாடும் பூம்புகார்



சோழர்களின் தலைநகரமாகவும் துறைமுகமாகவும் விளங்கிய பூம்புகார் (காவிரிப்பூம்பட்டினம்) இலக்கிய சிறப்பு வாய்ந்த நகரமாகும். ஏதென்ஸ், ரோம் போன்ற பழம்பெருமை வாய்ந்த நகரங்களுடன் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்கள் வாணிகத் தொடர்பு கொண்டிருந்த துறைமுக நகரமான பூம்புகார், இயற்கைப் பேரிடரால் கடலுக்குள் மூழ்கிவிட்டது. ரோம், ஏதென்ஸ் போன்ற நகரங்கள் இன்றும் சிறப்புடன் திகழும் நிலையில், தமிழர்களின் புகழ்மிக்க பூம்புகார் நகரம் இல்லையே என்ற ஏக்கத்தைப் போக்கும் வகையில் கடலுக்குள் மூழ்கிய பூம்புகாரை, கரை மீது கட்டமைத்த பெருமை கலைஞருக்கு உண்டு.

சிலப்பதிகாரம், பட்டினப்பாலை ஆகிய தமிழ் இலக்கியங்களில் காட்டப்படும் பூம்புகார் போலவே எழுநிலைமாடம், நெடுங்கல் மன்றம், இலஞ்சி மன்றம், பாவை மன்றம் ஆகியவற்றுடன் புதிய பூம்புகாரை 1973ஆம் ஆண்டு கலைஞர் தனது ஆட்சிக்காலத்தில் உருவாக்கி, தமிழரின் திறனை உலகறியச் செய்தார்.

## கீழடி




உலகின் மூத்த நாகரிகங்களில் ஒன்றான திராவிட நாகரிகத்தில் மூத்த மொழி தமிழ். பிற நாகரிகங்களுக்கு முன்னோடியாக தமிழர்கள் மிகச் சிறந்த நகரக்கட்டமைப்புடனும், கல்வியறிவுடனும் திகழ்ந்தனர் என்பதை சிவகங்கை மாவட்டம் கீழடியில் நடந்த வைகை ஆற்று நாகரிக அகழாய்வுகள் வெளிப்படுத்தின. அதுபோலவே தாமிரபரணி (பொருநை) ஆற்று நாகரிக சிறப்புகளை ஆதிச்சநல்லூர், சிவகளை, கொற்கை அகழாய்வுகள் மெய்ப்பித்தன. தமிழர் நாகரிகத்தின் பெருமையை இந்திய ஒன்றிய அரசு அங்கீகரிக்க மறுத்த நிலையில், உலகத்திற்கு அதை எடுத்துக்காட்டும் வகையில் கீழடி மற்றும் பொருநை அருங்காட்சியகங்களை உருவாக்கியவர் திராவிட மாடல் ஆட்சியின் நாயகர்.

## கிண்டி கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை

கலைஞர் வழியை பின்பற்றிய திராவிட மாடல் அரசு, சென்னை கிண்டியில் கலைஞர் பெயரில் உலக தரத்திலான பன்னோக்கு மருத்துவமனையை அமைத்தது. கிராமங்களில் உள்ள முதியவர்கள் பெண்கள் ஆகியோருக்கான தொற்றா நோய் சிகிச்சையை வழங்குவதற்காக மக்களை தேடி மருத்துவம் எனும் திட்டத்தை அறிமுகப்படுத்தி மாதந்தோறும் அவர்கள் வீட்டிற்குச் சென்று பரிசோதனைகளை செய்து மருந்துகளை வழங்கியது.

இன்னுயிர் காப்போம்- நம்மை காக்கும் 48, பாதம் காப்போம், இதயம் காப்போம் ஆகிய திட்டங்களும் எளிய மக்களின் வாழ்நாளை உயர்த்தும் மருத்துவத் திட்டங்கள் ஆகும்.

